BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரமானது முன்னாள் மேயர் ஸூஸன் ஃபென்னெல் அவர்களை போற்றும்விதமாக அவரது பெயரை சவுத் ஃப்ளெச்சர்ஸ் ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸ் வளாகத்திற்கு மறுபெயர் சூட்டுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 14, 2021) – இன்றைக்கு நடந்த ஒரு விழாவில், மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்கள், மற்றும் வார்டுகள் 3 மற்றும் 4 ற்கான பிராந்திய மற்றும் நகர கவுன்சிலர்களாகிய மார்டின் மெடெய்ரோஸ் மற்றும் ஜெஃப் பௌமன் ஆகியோர் சவுத் ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸ் வளாகத்திற்கு முன்னாள் மேயர் ஸூஸன் ஃபென்னல் அவர்களை கவுரவிக்கும் விதமாக அவரது பெயரை சூட்டினர்.

இந்த ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸ் முதன் முதலில் செப்டம்பர் 28, 1997 அன்று திறக்கப்பட்டது; இதில் நீச்சல், ஸ்கேட்டிங், விளையாட்டுக்கள் மற்றும் உடற்பயிற்சி நிகழ்ச்சிகள் போன்ற பதிவுசெய்துகொண்ட மற்றும் அப்போதைக்கப்போது நுழைந்து பங்கேற்கக் கூடிய பலவிதமான நிகழ்ச்சிகளை வழங்கியதுடன், பதிவு செய்துகொண்ட நடனம், STEM மற்றும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தன்.

ப்ராம்ப்ட்டன் நகர சபை செப்டம்பர் 30, 2020 அன்று ஸுஸன் ஃபென்னல் ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸ் என மறுபெயர் சூட்டுவதற்கு ஒப்புதல் அளித்தது. இந்த மசோதாவை பிராந்திய கவுன்சிலர் மார்ட்டின் மெடெய்ரோஸ் முன்மொழிதலாக கொண்டு வந்தார் மற்றும் பிராந்திய கவுன்சிலர்கள் மைக்கேல் பல்லெய்ஸ்ச்சி, பால் விசெண்ட், பேட் ஃபோர்டினி மற்றும் ரொவீனா சான்ட்டோஸ் ஆகியோர் வழிமொழிந்தனர்.

**ஸூஸன் ஃபென்னல் அவர்கள் பற்றி**

ஸூஸன் ஃபென்னெல் அவர்கள் 1988 முதல் 2014 வரை ப்ராம்ப்ட்டன் நகரசபையில் பணியாற்றினார். இந்தக் காலத்தில், அவர் சவுத் ஃப்ளெட்சரின் ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸை உயிர்ப்பிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்; மேலும் ரோஸ் தியேட்டர் உட்பட, நகரத்தின் அடையாளச்சின்னங்களாக விளங்குகின்ற ஃப்ளவர் சிட்டி சமுதாய வளாகம் மற்றும் மூத்தகுடிமக்களுக்கான மையம், கேஸ்ஸீ கேம்ப்பெல் சமுதாயக் கூடம், ப்ராம்ப்ட்டன் சாக்கர் மையம், கோர் மெடோஸ் சமூக மையம் ஆகியவையும், செஞ்சுரி கார்டன்ஸ் பொழுதுபோக்கு மையம் மற்றும் சிங்க்வாகவ்ஸி பூங்காவை புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்துதல் போன்ற சிறந்த திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டன.

ப்ராம்ப்ட்டனின் ஸூம் (Züm) விரைவுப் பேருந்து போக்குவரத்து திட்டத்தை நிஜத்தில் கொண்டு வருவதற்காக, கூட்டாட்சி மற்றும் மாகாண நிதியாக $ 200 மில்லியனைப் பெறுவதற்கான ப்ராம்ப்ட்டன்

நகரத்தின் முயற்சியில் அவர் முக்கிய பங்கு வகித்தார்; மேலும் மூத்த குடிமக்கள் மற்றும் முன்னாள் ராணுவவீரர்களுக்கான தள்ளுபடி செய்யப்பட்ட கட்டணங்களுக்காக வெற்றிகரமாக வாதாடினார். வழிபாட்டுத் தலங்களுக்காக, அதன் வகையில் முதல் முதலான திட்டமிடல் கட்டமைப்பை உருவாக்கவும், ப்ராம்ப்ட்டனை கனடாவில் மிகவும் ஆற்றல்மிக்க பல தரப்பு நம்பிக்கை கொண்ட சமூகங்களைக் கொண்ட நகரங்களில் ஒன்றாக உருவாக்கவும் அவர் வழிநடத்தினார். ஃபென்னெல் அவர்கள் பாரம்பரியத்திற்கான பாதுகாப்பு அளிப்பதை ஆதரித்தார்; ஆல்டர்லியா, கென்னத் சிஷோம் மேன்ஷன் கட்டிடங்கள் இடிக்கப்படாமல் காப்பாற்ற தனிப்பட்ட பங்கு வகித்தார். முந்தைய 25 ஆண்டுகளை விட அவரது நிர்வாகத்தின் போதுதான், பாரம்பரிய கட்டிடங்கள் மிக அதிக அளவில் நியமிக்கப்பட்டன.

ஸூஸன் ஃபென்னெல் ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸ் எண் 500 ரே லாஸன் புலிவார்டில் அமைந்துள்ளது; இதுவே ப்ராம்ப்ட்டன் நகரின் கார்பன் அறவே இல்லாத கட்டிடமாக இருக்கும்; ஏற்கெனவே இருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்து புதிய கட்டிடங்களில் புதுப்பிக்கும் திட்டங்களில் இதுவும் ஒரு அங்கமாக இருக்கும்

**ஸூஸன் ஃபென்னல் ஸ்போர்ட்ஸ்ஃப்ளெக்ஸ் புதுப்பித்தல் பற்றி**

2019 ஆம் ஆண்டில், ப்ராம்ப்ட்டன் நகரம் அதன் 2019-2024 காலத்திற்கான எரிசக்தி மற்றும் உமிழ்தல் மேலாண்மை திட்டத்தை வெளியிட்டது: அதாவது, கார்பன் அறவே இல்லாத நிலைக்கு மாறுதல். இந்த திட்டத்தின் கீழ், நகரம் 2030 ஆம் ஆண்டில் 30 சதவிகிதம் மற்றும் 2050 இல் 80 சதவிகிதம் என்ற மாகாண மற்றும் கூட்டாட்சி பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வு குறைப்பு இலக்குகளை சுவீகரித்துக்கொண்டது.

ப்ராம்ப்ட்டனின் பெரும்பாலான பொழுதுபோக்கு வசதிகளே கிட்டத்தட்ட 50 சதவிகிதம் அளவில் நகரின் வருடாந்திர GHG உமிழ்வுகளை வெளிவிடுகின்றன. சூசன் ஃபென்னல் ஸ்போர்ட்ஸ் பிளெக்ஸ் இந்த புதுப்பித்தலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது; ஏனெனில் இந்தக் கட்டிடம்தான் அதிக GHG உமிழ்வை வெளியிடுகிறது. இந்தக் கட்டிட வசதியில் உள்ள பெரும்பாலான முக்கிய உபகரணங்கள் அதன் எதிர்பார்க்கப்பட்ட பலன் தரும் காலத்தின் விளிம்பில் இருந்தன. இந்தக் கட்டிடம் ஆண்டுக்கு சுமார் 1,100 டன் $CO_2$ ஐ வெளியிடுகிறது என்று, 2019 பயன்பாட்டுத் தரவுகளைப் பயன்படுத்தியதன் மூலம் தீர்மானிக்கப்பட்டது - இது 238 எண்ணிக்கை கொண்ட பயணிகள் வாகனங்களால் வெளியிடப்படும் உமிழ்வுகளுக்கு சமம் ஆகும்.

இந்தக் கட்டிடம் குறித்த *சாத்தியப்படும்தன்மைக்கான* ஆய்வு செப்டம்பர் 2020 இல் நிறைவடைந்தது, இதில் கார்பன் அறவே இல்லாத மாறுதலுக்கு அவசியம் எனப்படும் மாற்றங்கள் அடங்கும். மூன்று கட்ட திட்டத்தின் முதல் கட்டமானது, ஏப்ரல் 2021 இல் நகர சபையால் அங்கீகரிக்கப்பட்டது மற்றும் முன்மொழிவுகளுக்கான கோரிக்கை ஆகஸ்ட் 2021 இல் வெளியிடப்பட்டது.

**அறிஞர் கூற்றுக்கள்**

"முன்னாள் மேயர் ஸூஸன் ஃபென்னல் அவர்களையும், மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரத்தை அனைவருக்கும் வாழவும், வேலை செய்யவும், விளையாடவும் சிறந்த இடமாக மாற்றுவதற்கான அவரது அர்ப்பணிப்பையும் அங்கீகரிப்பதில் நான் பெருமைப்படுகிறேன். ப்ராம்ப்ட்டன் நகர சபையில் பணியாற்றிய 26 வருடங்களில், இந்த ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸை உயிர்ப்பிப்பதில் அவர் முக்கிய பங்கு வகித்தார்; கூடவே இன்றைக்கு நமது சமுதாயத்திற்கு முக்கியம் எனக் கருதப்படும் அடையாளச்சின்னமாக கருதப்படும் கட்டிடங்களையும் உயிர்ப்பிக்க வைத்தார்; இது பல தலைமுறைகளுக்கு அவர் பெயர் கூறும்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"முன்னாள் மேயர் ஸூஸன் ஃபென்னல் அவர்கள் தனது காலத்தில் நகர சபையில் பல சாதனைகளைச் செய்து முடித்தார். அவரது நிர்வாக காலத்தில், ப்ராம்ப்ட்டன் கடன் இல்லாத நகரமாக இருக்க வைத்தார் மற்றும் அவருக்கு மூன்று AAA எனும் தர மதிப்பீடு வழங்கப்பட்டது. அவர் ஒரு உண்மையான பாரம்பரியத்தை விட்டுச் சென்று, எங்கள் நகரத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினார், மேலும் இக்கட்டிடத்திற்கு அவரது பெயரை மறுபெயர் சூட்டுவதன் மூலம் அவருடைய பங்களிப்புகளை மதிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ஸூஸன் ஃபென்னல் ஸ்போர்ட்ஸ் பிளெக்ஸிற்கு மறுபெயர் சூட்டுதலுடன், கூடுதலாக, புதிய மற்றும் ஏற்கனவே உள்ள கட்டிடங்களை கார்பன் உமிழ்வு அற்றவையாக  மாற்றியமைக்கும் எங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தக் கட்டிடம்தான் ப்ராம்ப்ட்டன் நகரத்தின் முதன் முதலான கார்பன் உமிழ்வு அறவே இல்லாத கட்டிடமாக மாறும் என்று சொன்னால் மிகப்பொருத்தமாக இருக்கும். முன்னாள் மேயராக இருந்த  ஃபென்னெல் அவர்கள் இந்த நகரத்திற்கு பெண்கள் ஹாக்கியைக் கொண்டுவருவதற்கும் ப்ராம்ப்ட்டனில் விளையாட்டிற்கான வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கும் முக்கிய பங்கு வகித்தார்.

- *ஜெஃப் பௌமன், நகர கவுன்சிலர், வார்டுகள் 3 & 4, ப்ராம்ட்டன் நகரம்*

"இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டதில் நான் மிகவும்  பெருமையாக உணர்கிறேன். சூசன் ஃபென்னல் ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸ் என்னைப்பொருத்தவரை குறிப்பிடத்தக்க கட்டிடமாகும்; ஏனெனில் இது ஆல்டர்மேன் மற்றும் பிராந்திய கவுன்சிலராக இருந்தபடி நான் பிரதிநிதித்துவப்படுத்திய வார்டில் கட்டப்பட்ட அப்போதைய புதிய சமூக மையம் ஆகும், மேலும்  அசலில், "பெட்டி பெட்டியாக" இருந்த, வசதிகள் அற்ற அமைப்பிலிருந்து அசல் வடிவமைப்பை விரிவாக்க நான் வெற்றிகரமாக வாதிட்டேன்; இதன் மூலம் 1  வளையம் மற்றும் 1 சமூக அறை மட்டுமே என்ற நிலையில் இருந்து,  4-வளைய வசதி

கொண்டதாகவும், ஒரு சமூக நீச்சல்குளம், உடற்பயிற்சி கூடம் மற்றும் நூலகம் அமைந்தது. இந்த கவுரவம் அளித்தமைக்காக மேயர் மற்றும் நகரசபைக்கு நான் நன்றி கூறுகிறேன்.

- *ஸூஸன் ஃபென்னெல், முன்னாள் மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய தனிநபர்களை நாம் அங்கீகரிப்பது முக்கியமாகும். இந்த முக்கியமான கட்டித்திற்கு ஸுஸன் ஃபென்னல் ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸ் என முறைப்படி மறுபெயர் சூட்டுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பெயர்ப் பலகைகளைப் புதுப்பிப்பதற்கான பணிகள் நடந்து வருகின்றன, இறுதி வடிவம் பெறுவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca